# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

மார்ச் 2013 ✿ விலை ரூ. 15/-



ஓதிமலை முருகன், ஈரோடு மாவட்டம்

# முருகனின் ஆறெழுத்துண்மை ஓதுபவர்கள் முக்தி பெற வல்லவர்கள்



நாம் பூமியில் பெறுவதற்கு அரிய இந்த மானிடப் பிறவியை எடுத்துவிட்டோம். இப்பிறவியின் பலனை அறிந்து கொள்ளாமல் நாம் நமது வாழ்க்கையை பல விதமான செயல்பாடுகளுக்கு ஆட்படுத்தி, கடைசியில் "நாம் இதற்காகத் தானா இவ்வளவு துன்பப்பட்டோம்?" என்றெண்ணி, பல நேரங்களில் கவலைப்படுகிறோம். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று அவ்வைப் பிராட்டி இந்த மானிடப் பிறவியின் பயனை நமக்கு உணர்த்துகிறார்.

நாம் இந்த மானிடப் பிறவியைப் பயன்படுத்தும் விதமாக நம் இளமைப் பருவத்தில் கல்வி, கேள்வி மற்றும் ஞானத்தை உணரும் வகையில் சில ஆன்மிகப் பணிகளைச் செய்கிறோம். நாம் படித்த கல்வியினால் நம்முடைய அறிவு பெருகும். உலகத்தில் உள்ள நல்ல செயல்கள், தீய செயல்கள் பலவற்றை நாம் பகுத்து அறிகிறோம். காலத்தின் கட்டாயத்தில் நாம் ஒரு நல்ல மேன்மையான நிலையை சுமார் 25 வயதிலிருந்து 30 வயதுக்குள் அடைந்து விடுகிறோம். இவ்வாறு செய்வதால் இந்த ஆன்மாவுடன் நீங்கள் கற்ற கல்வி பல பிறவிகளுக்கு உதவும். இதை **திருவள்ளுவர் கல்வி என்ற அதிகாரத்தில் 8 ஆவது குறளாக "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்று கூறுகிறார்.** நாம் ஞான மார்க்கம் செல்வதற்கு கல்வி அவசியம். ஆனால் நாம் கல்வியைக் கற்றவுடன் நிலையாப் பொருளான செல்வங்களை நாடிச் சென்று நம்முடைய மீதி ஆயுளைக் கழிக்கிறோம். அப்படியானால் நிலையான பொருளைப் பெறுவது எப்படி? நிலையான பொருள் என்பது என்ன? இது சற்று ஆழ்ந்து சிந்திக்கக் கூடிய செய்தி ஆகும்.

சிறகடித்து நம் கண் முன் பறக்கும் ஒரு சிறிய வண்ணத்துப் பூச்சி, தனக்கு உணவாக தேனைத் தரும் மலரின் மீது அமர்ந்து தேனை உறிஞ்சிக் கொள்கிறது. அதே சமயத்தில் அந்த மலரில் உள்ள மகரந்தத்தூளை தன்னுடைய உடலில் எடுத்துச் சென்று வேறொரு பூவில் சேர்க்கிறது. இது போல் இந்த பூமியில் நாம் பல விதமான மலர்களைப் பார்க்கிறோம். அது போல் நாம் பல விதமான கல்வியைக் கற்கிறோம். இந்தக் கல்வியை பலருக்கும் சொல்லிக் கொடுத்து இந்த பூலோகத்தில் அனைவரையும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்கிறோம். இவ்வாறு பல பேருக்கு கல்வியைக் கற்றுக் கொடுப்பதால் கற்பவர்களும் வளர்கின்றனர். கற்றுக் கொடுப்பவர்கள் குருவாக விளங்குகிறார்கள். குருவாகப் பலர் இருக்கலாம், ஆனால் அவர்களில் சிலர் தான் ஞான நிலையை அடைந்து அதன் மூலமாக நமக்கு நல்ல ஞானத்தை விளக்குகின்றனர். இந்த வகையான ஞானமே நிலையான பொருள் ஆகும்.

இந்த ஞான மார்க்கத்தில் தான் ஒப்புயர்வற்ற நம் குருநாதர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் முருகனின் மீது 6666 பாடல்களைப் பாடி அருளியவர். இப்பாடல்கள் அனைத்தையும் ஆறு மண்டலங்களாக வகுத்துள்ளார். அவற்றுள் திருவலங்கற்றிரட்டு முதற்கண்டமும், இரண்டாம் கண்டமும் இரண்டாம் மண்டலத்தைச் சேர்ந்தவை.

சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

முதற்கண்டம் யாப்பிலக்கணத்தை விளக்கப் பாடப் பெற்றதாகும். திருவலங்கற்றிரட்டு என்பதன் பொருள் யாதெனில் திரு = இறைவன்; அலங்கல் = மாலை; திரட்டு =

தொகுப்பு. அதாவது இறைவன் மீது சூட்டப்பெறும் பாமாலைகளின் தொகுப்பு என்பதாகும். இதில் 6ஆவது பதிகமாகப் பாடப்பட்டது ஆறெழுத்துண்மை ஆகும். இப் பதிகம் காந்தாரபஞ்சமம் என்ற பண்ணில் இயற்றப்பட்டது.

முருகனின் மூல மந்திரம் "சரவணபவ" என்பதாகும். இந்த மகா மந்திரத்தினுடன் "ஓம்" என்ற பிரணவத்தையும் சேர்த்துக் கூறினால் முக்தி பெறுவது நிச்சயம். சரவணம் என்னும் நாணல் புற்கள் செறிந்து சூலுற்ற பொய்கையில், பவன் = தோன்றினவன் என வடமொழியில் அர்த்தமாம். சரம் = நாணம் புல்லாகலின், அதனிடை வெளியான சுவாமியை சரஜந்மன் எனவும் கூறுவர். (சரவணபவன்) என்பது சர+வண+ பவ எனப் பிரிக்கப்படுமாயின், 'ர'கரத்தின் முன் வந்த 'ந'கரம் ஒருமொழிக் கண்ணதாயின் 'ண'கரமாய்த் திரியும் என்னும் வடமொழி வழக்கு பற்றி 'ந' 'ண' ஆயிற்றென்க. மந்திரமாக உச்சரிக்கு ஞான்றும் இந்த 'ண'கரம் பொருந்தவே உச்சரிக்க வேண்டும். நார+அயநம் எனப் பிரிக்கப்படும் நாராயண சத்தம் மந்திர முறையில் ஓம் நமோ நாராயணாய என உச்சரிக்குமாறு நிற்றலும் உணர்க. சரம் = நாணம் எனும் பொருள் பயக்குங்கால் வநம் = செறிவு, நீர் எனும் பொருள் பயக்கும். பயக்கும்வழி நாணல் சூழ்ந்த பொய்கை எனக் கொளப்படும். ச = மங்களம், ர = ஒளி, கொடை, வ = சாத்துவிகம், ந = போர் எனப் பொருள் கொள்ளுங்கால் இவற்றோடு பவன்உதயமானவனே சரவணபவன் என்றலுமாம்.

ஐந்துமுகம் ஆறுமுகமாயினாற் போல் ஐந்தக்கரத்துடன் முப்பிரணவத்தையும் ஐக்கியம் செய்துள்ள நாதப் பிரமமுமாகிய மூலமும் சேர்ந்து "ஓம் நமசிவய" என நிற்பது தானே "சரவணபவ" என எழுந்த மோட்ச மந்திரம் ஆகிய புராதன தாசத பிரமம் எனும் ஆறெழுத்தாயாதைால் அவ்வாறெழுத்திற்கும் உடையான் எனப் பொருளாம். உற்பத்தி காண்டத்துத் திருவிளையாடல் படலத்தில்,

**நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்**
**தன்முகம் ஆகி உற்ற தாரகப் பிரமம் ஆகி**
**முன்மொழிகின்ற நந்தம் மூவிரண்டு எழுத்தும் ஒன்றாய்**
**உன்மகன் நாமத்து ஓராறு எழுத்தென உற்ற அன்றே**

என வருதலும் காண்க. இவ்வாறெழுத்தையே **ஷடக்ஷரம்** என்கிறோம்.

இவ்வெழுத்துகள் ஏனைய எழுத்துகளைப் போல் வடிவுற்றிருப்பினும் அவற்றைப் போலப் பலனற்றன அல்ல. திருட்டாந்தர், சிதாபாச ஜீவனாகிய மனிதன் தேவனைப் போன்ற வடிவு உள்ளவனாயினும் அந்தத் தேவனாக மாட்டான் என்று கூறுக. ஆறெழுத்தாயுள்ள இந்த மகாமனு வைத்தான் வள்ளி தெய்வயானை எனும் பிராட்டிகளிருவரும் பூர்வத்தில் செபித்தார்கள் எனச் சம்பவகாண்டம் 36 ஆம் அத்தியாயத்து 33 ஆம் சுலோகத்தில் ''ஸ்ரீ ஸுப்ரமணிய ஷடக்ஷர



மகாமந்திரத்தைப் பத்தியுடன் செபித்துக் கொண்டு" என்னும் வாக்கியங்களால் உணர்த்துகிறது என்னும் சுவாமிகளின் தெளிவான விளக்கத்தின் மூலம் சரவணபவ எனும் நாம மந்திர மகிமையும் பயனும் அறிகிறோம்.

**சரவணபவ :-**

ச = லட்சுமி
ர = கலைமகள்
வ= போக மந்திரம்
ந= சத்துருநாசம் (ண)
ப= மித்ரு செயம்
வ= நோயற்ற வாழ்வு.

என ஒவ்வோர் எழுத்திற்கும் இவ்வாறு பொருள் கூறுவதும் உண்டு.

இதன்படி, சரவணபவ மந்திரத்தை உச்சரித்து வந்தால் செல்வம், கல்வி, இம்மைக்கு நுகர வேண்டிய பொருள்கள், அனைத்தும் கிடைக்கும். உச்சரிப்பாரின் பகைவரை இம்மந்திரம் அழிக்கும். நண்பர்கள் பலரை அன்பால் வெற்றி கொள்ளச் செய்யும். என்றும் நோயற்ற வாழ்வையும் தரும் என அறியலாம்.

ஆறெழுத்துண்மை எனச் சுவாமிகள் இரண்டு பதிகங்கள் பாடியருளியுள்ளார்கள். திருவலங்கற்றிரட்டு முதற்கண்டத்தில் அமைந்துள்ளன. பெரும்பாலான பாம்பனடியார்கள் இவற்றை அறிவார்கள். பலப்பல கடவுளர் பரவியுள்ள விண்ணுலகத்தை அடைந்தாலும் தற்பரமாவது சரவணபவ எனும் திருவாறெழுத்து மந்திரமேயாகும்.

**பத்தியும் ஞானமும் பரவிடும் மார்க்கம்**
**எத்தனையோ வகை இருக்கினும் இகத்தில்**
**முத்திதந்து அனுதினம் முழுப்பலன் நல்கிடச்**
**சத்தியம் ஆவது சரவணபவவே.**

தம்மை வழிபடும் தேவர்கள்தம் காவலனின் மணம் கமழும் மாட்சிமைமிக்க திருவடியை எக்காலத்தும் சரவணபவ மந்திரத்தைச் சொல்லி வழிபட்டு வந்தால், மும்மலங்களை அழித்து, இவ்வுலகில் பரம்பொருளுடன் கலந்திருக்கும் "சீவன்முத்தர்" என்னும் மேலான வாழ்வை சரவணபவ எனும் மந்திரம் அடியார் உடைமை ஆக்கும்.

அருள் நலமும் ஆதியும் பொருள் நலமும் உள்ள முருகவேளைப் பூசித்து வரும் அடியார்களுக்கு ஊழ் வினைப் பயனாய் இருள் நரகத்தை அடைய நேரினும் அந்தத் துன்ப காலத்தில் அவரைக் காத்தருள்வது சரவணபவ எனும் மந்திரமேயாம். திருநீறு விளங்கும் திருமேனி உடையவனும், முழு நிறைவான ஆகாச வடிவுடையவனும், வேற்படை ஏந்திய அரசனும் ஆன பெருமானின் திருவடிகளை சரவணபவ எனும் மந்திரத்தைச் சொல்லிக் கைகளால் கும்பிடும் அடியவர்களுக்கும் இம் மண்ணுலகில் துன்பம் வருமாயின் உடனே காத்தருள்வது **சரவணபவ** எனும் மகா

மந்திரமேயாகும்.

முதல் மண்டலத்தில் நிட்களானந்த குகன் என்னும் பதிகத்தில், **“நின்னுடைய நாமமோ சீவர்களை முத்தியில் நிறுத்திடும் மகாமந்திரம்”** எனச் சுவாமிகள் கூறுவதால் இம்மையில் எல்லாத் துன்பங்களையும் நீக்கி எல்லா இன்பங்களையும் அருள்வதும் உயிர்கள் அனுபவிக்கும் பிறவி என்னும் பெரு நோயையும் ஒழித்து பேரின்ப முத்தியையும் அப்பெருமானது திருப்பெயர் அளித்தருள வல்லதாய் இருத்தலால் அதன் அருமையும், பெருமையும் அளவிடற்கு எளிதோ? அப்பெருமானின் திருப்பெயர்கள் பலவற்றுள்ளும் **சரவணபவ** என்னும் திருப்பெயரே மகா மந்திரம் எனச் சுவாமிகள் போதித்துள்ளதால் அதனை விடாது செபித்து பெறுதற்கரிய முக்தியைப் பெறுவோமாக.

இப்பாடலை சுவாமிகள் நந்தன வருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி சுக்கிர வாரத்தில் இயற்றியுள்ளார்கள். இந்தக் கட்டுரையில் வரும் சரவணபவ என்னும் மூல மந்திரத்திற்கு விளக்கம் அருநூற்புலமை ஆன்றோர் பேராசிரியர் டார்டர் ப. இராமன் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் முழுமையும் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பர்கள் மேற்கண்ட இணைய தளத்தில் சென்றால் உங்கள் வீட்டுக் கணினி இப்பாடலை எப்படி பாட வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும். இந்த வகையான பெருமைகளை என்னுடைய குருநாதர் திருவடிக்கு சமர்ப்பணம் செய்கிறேன். இப்பாடலின் விளக்கம் வேண்டும் அன்பர்கள் இந்த மாத இதழ் ஆசிரியர் அவர்களைத் தொடர்பு கொண்டால்



## குழந்தைகளைத் தவிட்டுக்கு விற்கும் குறுக்குத்துறை முருகன் கோயில்

இங்கு தங்கள் குழந்தைகளை தவிட்டுக்கும், கருப்பட்டிக்கும் முருகன் முன்னால் வந்து விற்று, பிறகு வாங்கிச் செல்வார்கள். இக்கோயிலில் தைப் பூசம், மாசி அமாவாசையாக கொண்டாடப்படும். மாசி அமாவாசை அன்று பத்தாயிரம் தீபங்கள் ஏற்றப்படுகினறன. ஆறு வருடங்களுக்கு ஒருமுறை இந்த நாளில் லட்ச தீபம் ஏற்றப்படும்.

திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தி லிருந்தும், டவுன் ரயில் நிலையத்திலிருந்தும் 2கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பஸ், ஆட்டோ வசதி உள்ளது.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**